[திரு. அ. சவுந்தரராசன்] [2013 அக்டோபர் 28

என்று வலியுறுத்துகிறேன். பணப் பயன் பெறுவோருக்கு ரூபாய் ஐந்தாயிரத்திற்கும் மேல் உள்ளவர்களுக்கு மட்டும் வங்கிக் கணக்கு வழியாக காசோலை தரலாம். எல்லோருக்கும் வங்கிக் கணக்கு என்பதை நிபந்தனையாக்காமல் படிப்படியாக அமல்படுத்தலாம்.

பிற்பகல் 12-05

முறைசாரா நல வாரிய முத்தரப்புக் குழுக்கள் கடந்த இரண்டரை ஆண்டுகளாக அமைக்கப்படவில்லை. இது சட்டத்திற்கு முரணானதாகும். இதனால் தொழிற்சங்கங்கள் கருத்து கூறமுடியவில்லை. அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொள்கின்றனர். இப்போதைய நடைமுறைகளினால் தொழிலாளர் பதிவும், பயன்பெறுதலும் பாதிக்கப்படுகிறது. அதிகாரிகள் ஆங்காங்கே தனித்தனியாக நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். நல வாரியம் என்ற நல்லதோர் வீணை செய்துள்ளோம். அதை நலன்கெட புழுதியில் எறிகிற நிலையை அதிகாரிகளால் ஏற்படாதவண்ணம் அரசு திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அரசையும் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்களில், இன்றையதினம் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன்கள், தொழிற்சங்கங்களுக்கு, தொழிற்சங்க ரீதியாக, சட்டரீதியாக வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைகள் எல்லாம் மறுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் 32 நல வாரியங்கள் அமைக்கப்பட்டும் தொழில்ரீதியான அணுகுமுறை, நிதியாதாரங்கள் மற்றும் சுதந்திரமான தொழிற்சங்கங்களின் பங்கேற்பு உறுதி செய்யப்படவில்லை. பல ஆண்டுகளாக பணப் பயன்கள் பலருக்குக் கிடைக்காமலும், இ.எஸ்.ஐ., வீட்டு வசதி, பணி ஊதியம் முறைப்படுத்தல் ஆகியவை அமல்படுத்தப்படாமலும், அதனால் வாழ்வுரிமை பாதிக்கப்படுகின்ற நிலைமை இருந்து வருகின்றது. அரசாணை எண்கள் 122, 123, 124 ஆகியவற்றை இரத்து செய்து, வருவாய்த் துறை குறுக்கீடில்லாமல் நல வாரியங்களைச்